16-07-2025.
O.S.No. 279/2019

பி.வா. சா. 2 செல்வராஜ் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

தாவாச்சொத்தில் ஒரு மனையிடத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன். சொத்தை கிரையம் வாங்கும் முன்பு வில்லங்கம் எடுத்துப்பார்த்தேனா என்றால் இல்லை. சொத்தை கிரையம் வாங்கிய பின்னர் வீடு கட்டுவதற்காக கடன் பெறுவதற்காக வில்லங்கம் எடுத்துப் பார்த்தேன். 1983ம் ஆண்டு சொத்தை நான் கிரையம் பெற்றேன். அந்த வருடத்திலிருந்துதான் நான் வில்லங்கம் போட்டுப் பார்த்தேன். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு தாவாச்சொத்து கந்தசாமி நாயுடு என்பவருக்கு பாத்தியப்பட்டதல்ல என்று சொன்னால் கந்தசாமி நாயுடுவிடமிருந்துதான் நான் சொத்தை கிரையம் பெற்றேன். நான் கிரையம் வாங்கிய தேதியில் வாதிகளின் தகப்பனாருக்கும் சொத்தில் பாகம் இருந்தது என்றும் அதையும் சேர்த்து கந்தசாமி நாயுடு கிரையம் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற மனையிடம் வாதிகளின் பாகத்தைப்பொறுத்து ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.07.16 15:56:33 +0530

Principal District Judge,
Dindigul.